இறையரசு மலர

REGNUM CHRISTI

“அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள் யோவான்” 2:5

# DIOCESAN NEWS LETTER VELLORE

(FOR PRIVATE CIRCULATION ONLY)

Vol. 17 DECEMBER - 2021 No. 12

Synod 2021 2023

**For a Synodal Church**

communion | participation | mission



*Merry Christmas*

*&*

*Happy New Near - 2022*

**Dear Fathers, Brothers and Sisters…**

We are in the season of Advent followed by the joyful celebration of Christmas. **Advent** is a season of the liturgical year observed in most Christian denominations as a time of expectant waiting and preparation for both the celebration of the Nativity of Christ at Christmas and the return of Christ at the Second Coming. Advent is the beginning of the liturgical year in Western Christianity. The season of Advent in the Christian calendar anticipates the "coming of Christ" from three different perspectives: **the physical nativity in Bethlehem, the reception of Christ in the heart of the believer, and the eschatological Second Coming.**

As we are in the process of Synodality let this season of Advent make us to realize the three themes: **Communion**, **Participation**, and **Mission** in the preparation for the birth of Jesus our Savior. In these four weeks of Advent let us come together in one spirit of family breaking all our boundaries, participate meaningfully in the celebration of the Nativity of our Lord and proclaim the Good News of the birth of our Savior to all believers and non-believers. Let us prepare our hearts as the Manger for our Savior to be born one more time in our life.

I wish you all a very **MERRY CHRISTMAS AND PROSPEROUS NEW YEAR 2022.**

May the New Born Babe bless us all abundantly and lead our diocese throughout the New Year 2022 for a Church of Synodality.

In this month on December 8 we celebrate the solemnity of the Immaculate Conception of the Blessed Virgin Mary. Let the purity of Mary reflect in our hearts and make our second conception to Christianity through our Baptism Holy and pure. Let us ejaculate this holiness in all our activities.

Wish you all a very **HAPPY FEAST**

In our diocese the Synodal process is going on well. During the whole month of November the Synodal team has visited all the priests in 8 Vicariates, all the headmasters of our RCM schools, and representatives of Anbiam leaders from all the parishes exhibited the theme and the tools, conducted the group discussions on the

given questionnaires. In the month of December we are going to have the same for the Catechists, Teachers and all the Religious. I take this opportunity to thank all the team members for their laborious work in this task. I do appreciate all the priests, headmasters, and Anbiam leaders for their active participation. Let all the other groups take part in this Synodal preparation without fail. I ask all the parish priests kindly conduct the same in your respective parishes, prepare well our people and send their valuable suggestions, recommendations, and proposals to the diocesan Coordinator.

Dear fathers, sisters and my dear people kindly be very cautious of the 3rd wave of Corona virus and follow the standard operating procedure (SOP). Once again I wish you all a Fruitful Advent, Joyful Christmas and Prosperous New Year. Kindly pray for me and for our diocese as I do for you.

God bless,

**Yours in Christ Jesus,**



**Very Rev. Msgr. I. John Robert,**
**Diocesan Administrator**

**Clergy monthly recollection and Christmas celebration**

As usual the December monthly recollection and Christmas celebration for all the clergy will take place on Wednesday, 15 Dec. 2021.

**Date** : 15/12/2021 **Venue** : Sangamam Hall

**Program** :

9:30 am - arrival and coffee
10:00 am - talk
11:30 am - adoration and confession
12:30 am - Christmas program followed by lunch

Let us come together as one family share our joy of Christmas with our brother priests.

God bless

**Yours in Christ Jesus,**

**Very Rev. Msgr. I. John Robert,**
**Diocesan Administrator**

**Administrator's Programme:**

| | | |
|---|---|---|
| 1 | Wed | Wedding, Chennai |
| 3 | Fri | Feast day Mass, Zemingudallore |
| 4 | Sat | Tiruvannamalai BCC Synodal Process |
| 5 | Sun | Confirmation & concluding the year of St. Joseph, Mosavadi |
| 6 | Mon | Council Meeting, Bishop's House, Vellore |
| 9 | Thu | Blessing of the renovated Presbytery, Bagayam |
| 11 | Sat | CRI Synodal Process Vellore District |
| 14 | Tue | Catechists Synodal Process, Bishop's House, Vellore |
| 15 | Wed | Priests X- mas gathering & Recollection, Bishop's House, Vellore |
| 17 | Fri | Consolidated pay teachers X-mas, Bishop's House, Vellore |
| 18 | Sat | CRI Synodal Process Thiruvannamalai District |
| 19 | Sun | Legion of Mary X-mas, Bishop's House, Vellore |
| 22 | Wed | M - Xmas Celebration, VSSS<br>E - Xmas Celebration, Central Jail, Vellore |
| 24 | Fri | Evening Christmas Vigil Mass, Assumption Cathedral, Vellore |
| 27 | Mon | Dn. Amuthan's Ordination, Tirupattur |
| 30 | Thur | Flag hoisting, Manali New Town |
| 31 | Fri | New Year Mass, Assumption Cathedral, Vellore |

**Yours in Christ Jesus,**

**Very Rev. Msgr. I. John Robert,**
**Diocesan Administrator**

APOSTOLIC NUNCIATURE
IN INDIA

50-C, NITI MARG, CHANAKYAPI
NEW DELHI - 110 021

8 October 2021

Prot. N. 0899/21/IN

Your Graces and Lordships,

I was glad recently to be able to visit, albeit briefly, the Diocese of Kottar, which is part of the Tamil Nadu Bishops' Council. I look forward to meeting each one of you personally, hopefully in your own dioceses.

At the very outset I would like to express my solidarity with you for your commitment and dedication. I convey my appreciation for the service that you render in your pastoral ministry. At the same time, I would also like to share some of my concerns, which I hope will be useful in working together to build up the Church.

Particularly, I wish to refer to Can. 285 §4 of Canon Law. With regard to priests, it stipulates that "*without the permission of their ordinary, they are not to take on the management of goods belonging to lay persons or secular offices which entail an obligation of rendering accounts. They are prohibited from giving surety even with their own goods without consultation with their proper ordinary.*"

Furthermore, according to Can 286, "*clerics are prohibited from conducting business or trade personally or through others, for their own advantage or that of others, except with the permission of legitimate ecclesiastical authority*" (Can. 286).

It has come to my attention that in Tamil Nadu there is tendency amongst the clergy to establish and manage independent trusts, habitually registered under the guise of a *Non-Governmental Organization*, ostensibly intended to provide assistance to those in need.

Even if the aim of such trusts may appear to be praiseworthy, all too often these trusts become financial and political power bases for the priests involved.

The Archbishops and Bishops
Tamil Nadu Bishops' Council
TNBC Secretariat
Chennai – 600 004 (Tamil Nadu)

Therefore, in light of the Canons cited above, the matter must be regulated by the relevant Bishops, following some guidelines that might be provided by the Bishops' Conference.

Priests and religious should not be directly associated with any independent or stand-alone Trusts or Societies or For/Not for Profit Companies, unless their involvement has specifically been approved by the diocesan Ordinary. In short, priests and religious must have authorization to hold secular offices, for which they are legally accountable.

Canon Law is also clear on the consequences of an infringement of these norms, precisely in circumstances where a profit is generated by the activities involved: "*Clerics or religious who exercise a trade or business contrary to the prescripts of the canons are to be punished according to the gravity of the delict*" (Can. 1392).

In light of this, I would kindly recommend that the TNBC formulates clear guidelines on the subject, if not already established. Moreover, every Bishop might consider the following steps:

1) To ascertain the details of the personal trusts held by any of priests in the Diocese.
2) To instruct that the existing personal trusts are to be closed and no new ones be opened.
3) To bring under the control of the diocesan trust or the diocesan social services trust those trusts that are of genuine benefit to the life and mission of the Diocese.
4) To resolve that no trust is to be under the sole control of a single member of the clergy.

Thanking you in advance for the consideration you will accord to this plea for the well-being of the Church in Tamil Nadu, I wish to encourage you to continue your pastoral activities with much zeal and enthusiasm.

With my warm regards and prayerful wishes, I remain

Yours fraternally in Christ,

+Leopoldo Girelli

Archbishop Leopoldo Girelli
*Apostolic Nuncio*

## உலக ஆயர்கள் மாமன்றம் 2021-2023

1. ஆயர்கள் மாமன்றம் என்றால் என்ன? ஆயர்கள் மாமன்றம் என்பது உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, குறிப்பிட்ட காலங்களில் ஒன்றுகூடும் ஆயர்களின் குழுவாகும். இந்த ஆயர்கள் திருத்தந்தைக்கும் ஆயர்களுக்குமிடையே மிக நெருக்கமான ஒற்றுமையைப் பேணி வளர்க்கின்றனர். இறை நம்பிக்கை ஒழுக்க நெறிகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும், திருஅவை ஒழுங்குமுறைகளைக் காக்கவும், உறுதிப்படுத்தவும், உலகில் திருஅவைப் பணியைப் பொறுத்தவரையில் ஆலோசனையால் திருத்தந்தைக்கு உதவி புரிகின்றனர். (திருஅவைச் சட்டம், எண் 342)

2. உலக ஆயர்கள் மாமன்றம் எப்போது தொடங்கி எப்போது முடிவடையும்? திருத்தந்தை, இவ்வாண்டு (2021) அக்டோபர் மாதத்தில், மூன்றாண்டு ஆயர்கள் மாமன்றப் பயணம் ஒன்றைத் துவக்கிவைப்பார். மறைமாவட்டம், நாடுகள், மற்றும் உலக அளவில் நடைபெறும் அப்பயணம், கருத்தறிதல் மற்றும் தேர்ந்துதெளிதல் முறைகளில் நடைபெற்று இறுதியில் வத்திக்கானில் 2023-ம் ஆண்டு அக்டோபரில், உலக ஆயர்கள் மாமன்றத்தோடு நிறைவடையும்.

3. மாமன்ற இலட்சிணை **(Logo)** குறித்துக்காட்டுவது என்ன? விண்ணைத் தொடும் ஞானமும் ஒளியும் நிறைந்த பெரிய கம்பீரமான மரம். அபார வலிமையும் நம்பிக்கையும் கொண்டதாக சிலுவையைப் பிரதிபலித்து நிற்கிறது. கதிரவன் போன்று ஒளி உமிழும் வட்ட வடிவிலான நற்கருணையை அது கனியாக்குகிறது. கைகளாக, சிறகுகளாக விரிந்துள்ள அதன் கிளைகள் தூய ஆவியாரை குறிக்கின்றன. இறைமக்கள் தேக்கநிலையில் இல்லாமல், இணைந்து பயணிக்கின்றனர். இந்த வாழ்வின் மரம் அவர்கள் அனைவருக்குள்ளும் சுவாசமாக்கும் பொதுமையான இயக்க உந்துதலால், மரத்திலிருந்தே தங்கள் பயணத்தைத் தொடங்குகின்றனர். இக்கூட்டுப்பயணத்தில் இடம் பெற்றுள்ள 15 நிழல் உருவங்கள் நம் மனிதத்தின் அனைத்து வாழ்க்கைச் சூழல்களையும், தலைமுறையினரையும், தங்களுக்குள் கொண்டுள்ளன. இந்தப் பன்முகத்தன்மையை வலியுறுத்தும் ஒளிமயமான பல வண்ணங்களே மகிழ்ச்சியின் அடையாளங்களாய் உள்ளன. இளையோர், முதியோர், ஆண்கள், பெண்கள், இளம்பருவத்தினர், குழந்தைகள், பொதுநிலையினர், துறவோர், பெற்றோர்கள், தம்பதியர்கள், மாற்றுத்திறனுடையோர் அனைவருமாக சம தளத்தில் பயணிக்கின்றனர். ஆயரும் துறவோரும் அவர்களின் முன்னிலையில் இல்லாமல், அவர்களுக்கிடையே உள்ளனர்.

4. எதற்காக மாமன்றத் தயாரிப்பு ஏடு வெளியிடப்பட்டுள்ளது? கூட்டொருங்கியக்கத் திருஅவையாக வளர்வதற்கு, ஆவியானவர் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று நம்மைத்

தூண்டுகிறார் என்று சிந்திப்பதற்கு மாமன்றத் தயாரிப்பு ஏடு அழைப்பு விடுக்கிறது.

**தயாரிப்பு ஏட்டின் நோக்கம் :**

1. இறைமக்கள் தங்களின் கருத்துக்களைத் துணிச்சலோடு எடுத்துரைக்க.
2. அவற்றுக்கு முற்சார்பற்ற மனநிலையோடு செவிமடுக்க.
3. திருஅவை சமுதாயம் மற்ற கிறிஸ்தவ சபைகள் ஆகியவற்றோடு கலந்துரையாடல் நடத்த.
4. திருஅவை தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட நற்செய்தி அறிவிப்புப் பணியில், பல்வேறு நிலைகளில் ஒன்றிணைந்து பயணிக்க.
5. கூட்டொருங்கியக்கத் திருஅவையாக வளர்வதற்கு நாம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று தூய ஆவியானவர் நம்மைத் தூண்டி வழிநடத்துகிறார் என்பதை அறிந்துகொள்ள.

5. தயாரிப்புக் கையேட்டின் நோக்கம் என்ன? தலத் திருஅவையில் உள்ள இறைமக்களின் அனுபவங்களை வெளிப்படுத்த, குரல் கொடுக்க, அவர்களைத் தயாரிக்க உதவியாக.
6. கூட்டு ஒருங்கியக்கம் என்றால் என்ன? முதலாவதாக, கூட்டொருங்கியக்கம் என்பது திருஅவையின் வாழ்வையும், பணியையும் குறிக்கிறது. ஒன்றாகப் பயணம் செய்யும் திருஅவையாக, தூய ஆவியாரின் வல்லமையால் நற்செய்தியை அறிவிக்க ஆண்டவர் இயேசுவால் அழைக்கப்படுவது திரு அவையின் இயல்பாகும்.
7. உலக ஆயர்கள் மாமன்றத்தின் நோக்கம் என்ன? இறைமக்கள் ஒருவர் ஒருவருக்குச் செவிகொடுத்து அனைவரும் இணைந்து தூய ஆவியானவர் திருஅவைக்கு சொல்ல விரும்புவது என்ன என்பதை செவிமடுத்துக் கேட்பதுவே மாமன்றத்தின் நோக்கம் ஆகும்.
8. மாமன்றத்தின் நோக்கம் எவ்வாறு நிறைவேறும்? இறைவனின் வார்த்தைக்கும், வாழும் பாரம்பரியத்திற்கும், ஒருவர் ஒருவருக்கும், குறிப்பாக காலத்தின் அறிகுறிகளை உணர்ந்து விளிம்பு நிலையில் இருப்போருக்கும் செவிமடுப்பதன் வாயிலாக மாமன்றத்தின் நோக்கம் நிறைவேறும்.
9. உலக ஆயர்கள் மாமன்றத்தின் மையப்பொருள் என்ன? கூட்டொருங்கியக்கத் திரு அவைக்காக ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு.
10. ஒன்றிப்பு என்றால் என்ன? மூவொரு இறைவனின் அன்பிலும் ஒன்றிப்பிலும் நமது ஒன்றிப்பு ஆழமாக வேரூன்றியுள்ளது. நம்மை இறைத் தந்தையோடு ஒப்புரவாக்கி, தூய ஆவியாரின் வழியாக நம்மை ஒருவர் மற்றவரோடு இணைப்பவர் இயேசு கிறித்துவே.

11. பங்கேற்பு எதில் அடங்கியுள்ளது? தூய ஆவியாரிடமிருந்து பெற்றுக்கொண்ட அருட்கொடைகள் வாயிலாக அனைத்து இறைமக்களும் ஒருவர் ஒருவருக்குப் பணிபுரிய தகுதி பெறுகிறார்கள். மாமன்ற நிகழ்வுகளில் விளிம்பில் உள்ளவர்களை அல்லது ஒதுக்கப்பட்டவர்கள் என உணர்பவர்களை ஒன்று சேர்ப்பதை உறுதி செய்ய வேண்டும்.

12. நற்செய்தி அறிவிப்பு என்றால் என்ன? நற்செய்தி அறிவிப்பதற்காகவே திருஅவை உள்ளது. ஆன்மீக, சமூக, பொருளாதார அரசியல், புவியியல் எல்லைகளுக்கு உட்பட்ட மக்களுக்கு சிறந்த சான்று தருவதே நற்செய்தி அறிவிப்புப் பணி ஆகும்.

13. மாமன்றத் தயாரிப்புகள் எவ்வாறு நடைபெறும்? கூட்டொருங்கியக்கம் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றத் தயாரிப்புகள், 2021ம் ஆண்டுக்கும், 2023ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், மூன்று கட்டங்களாக நடைபெறும்.

14. மாமன்றத்தின் முதல் நிலை எப்போது துவங்கும்? உலக ஆயர்கள் மாமன்றத்தின் முதல் நிலை 2021 அக்டோபர் 9, 10 ஆகிய தேதிகளில் வத்திக்கானில் திருத்தந்தை தலைமையேற்று நடத்தும், இறைவேண்டல், திருப்பலி, தியானம், சிந்தனை ஆகியவற்றோடு துவக்கி வைக்கப்படுகிறது.

15. மறைமாவட்ட அளவில் எப்போது துவங்கும்? மறைமாவட்ட அளவில், தல ஆயரின் தலைமையில், வருகிற அக்டோபர் 17ம் தேதி துவங்கும். 2021ம் ஆண்டு அக்டோபர் முதல், 2022ம் ஆண்டு ஏப்ரல் வரை தலத்திரு அவைகளில் பல்வேறு தயாரிப்பு நிகழ்வுகள் நடைபெறும். இது, இறைமக்களின் கருத்தறிதல் மற்றும் பங்கேற்புடன் நடைபெறும். அதற்கு உதவியாக, உலக ஆயர்கள் மாமன்றப் பொதுச் செயலகம், கேள்வித் தொகுப்பை அனுப்பி வைத்துள்ளது. அதன் அடிப்படையில் மறைமாவட்ட மாமன்றத்தில் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெறும். அதே கேள்வித் தொகுப்பு, திருப்பீட பல்வேறு துறைகள், இருபால் துறவு சபைத் தலைவர்கள் அமைப்பு, துறவியர் கூட்டமைப்புகள், பன்னாட்டுப் பொதுநிலையினர் இயக்கங்கள், பல்கலைக்கழகங்கள், மற்றும், இறையியல் துறைகளுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

மறைமாவட்ட மாமன்றத்தின் பரிந்துரைகள், இந்திய ஆயர் பேரவைக்கு அனுப்பப்படும். அந்தப் பேரவை அவற்றைத் தொகுத்து, உலக ஆயர்கள் மாமன்றப் பொதுச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கும். இந்த முதல்நிலை 2022ம் ஆண்டு ஏப்ரலில் நிறைவடையும். இதன் அடிப்படையில் முதல் வழிகாட்டு செயல்முறைத் தொகுப்பை பொதுச்செயலகம் தயாரித்து, 2022ம் ஆண்டு செப்டம்பரில், தலத்திரு அவைகளுக்கு அனுப்பி வைக்கும்.

16. கண்டம் வாரியாக கலந்துரையாடல் மற்றும் தேர்ந்து தெளிதல் எப்போது? 2022ம் ஆண்டு செப்டம்பரிலிருந்து, 2023ம் ஆண்டு மார்ச் வரை மாமன்ற தயாரிப்புப் பணிகள் கண்டம் வாரியாக நடைபெறும். முதல் வரைவுத் தொகுப்பின் அடிப்படையில் கலந்துரையாடல் நடத்தி இவை அனுப்பி வைக்கும் பரிந்துரைத் தொகுப்பு, 2023ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் பொதுச் செயலகத்திற்கு வந்துசேரும். இந்தத் தொகுப்பின் அடிப்படையில் பொதுச்செயலகம், இரண்டாவது வழிகாட்டு செயல்முறைத் தொகுப்பை, 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து அனுப்பி வைக்கும். அதற்குப்பின் 2023 ஆம் ஆண்டு அக்டோபரில் வத்திக்கானில் நடைபெறும் உலக ஆயர்கள் மாமன்றத்தோடு இது நிறைவடையும்.

17. ஒன்றிணைந்த பயணம் எவ்வாறு நடைபெறுகிறது? பின்வரும் பத்து கருப்பொருள்களும் கூட்டொருங்கியக்கத் திருஅவையாக வாழ கூறுகளை முக்கியமாக முன்வைக்கிறது. ஒன்றோடு ஒன்று தொடர்புடைய இரண்டு வழிகளில் ஒன்றிணைந்த பயணம் நடைபெறுகிறது. ஒன்று, இறைமக்கள் என்ற அளவில் நாம் திருஅவையில் உள்ளோருடன் இணைந்து ஒன்றாகப் பயணம் செய்கிறோம். இரண்டு, இறைமக்களாக ஒட்டு மொத்த மனித சமுதாயத்துடன் இணைந்து பயணம் செய்கிறோம்.
ஒவ்வொரு கருப்பொருளுக்கும் தரப்பட்டுள்ள வினாக்கள் நமது தனிப்பட்ட மற்றும் பொதுவான பகிர்தலுக்கு தொடக்கம் மட்டுமே.

17. 1. உடன் பயணிக்கும் தோழர்கள் திருஅவையிலும், சமூகத்திலும் ஒரே பாதையில் அருகருகே ஒன்றாக தோழர்களாகப் பயணிக்கிறோம்.
நமது தலத் திருஅவையில் நம்மோடு உடன் பயணிப்போர் யார்? எவ்வாறு நாம் தோழமையில் வளர்வது? நம்மால் பின்னுக்குத் தள்ளப்பட்ட அல்லது நமது பார்வையில் படாத நபர்கள் அல்லது குழுக்கள் யார்?

17. 2. செவிமடுத்தல் : திறந்த மனத்தோடு, முற்சார்பு எண்ணமின்றி ஒருவர் ஒருவருக்கும் அனைவரும் சேர்ந்து தூய ஆவியாருக்கும் செவிமடுப்பது.
யாருக்கு நாம் செவிமடுக்க வேண்டும்? ஒருசில நேரங்களில் நாம் கண்டுகொள்ளாத மனிதர்கள் வாயிலாக கடவுள் நம்மோடு என்ன பேசுகிறார்? பொதுநிலையினருக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு, இளையோருக்கு எவ்வாறு செவிமடுக்கிறோம்? நாம் செவிமடுக்க உதவியாக அல்லது தடையாக இருப்பவை யாவை? விளிம்பு நிலையில் இருப்போருக்கு எவ்வாறு செவிமடுக்கிறேன்? பிறருக்கு செவிமடுக்காதவாறு தடையாக உள்ள முற்சார்பு எண்ணங்கள் யாவை?

17. 3. உரையாடுதல் : துணிவுடனும், சுதந்திரமாகவும், உண்மையாகவும், அன்பாகவும் பேசுவது, தங்களது கருத்துக்களை வெளியிடுவது.

நமது தலித் திருஅவையிலும், சமூகத்திலும் பொறுப்புடன் நமது கருத்துக்களை வெளிப்படுத்த உதவியாக அல்லது தடையாக இருப்பவை யாவை? எப்போது, எவ்வாறு நாம் முக்கியமானவற்றை எடுத்துச் சொல்ல முன்வருகிறோம்? சமூக ஊடகங்களோடு நமக்குள்ள உறவு எத்தகையது? யார் கிறித்தவ சமூகத்தின் சார்பாகப்பேசுவது? அவர்கள் எவ்வாறு தேர்வு செய்யப்படுகிறார்கள்?

17. 4. கொண்டாடுதல் : ஒரு சமூகமாக இறைவார்த்தையைக் கேட்பதாலும், நற்கருணையைக் கொண்டாடுவதாலும் ஒன்றாகப் பயணிக்க முடியும்.

இறைவேண்டலும், திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களும் எவ்வாறு நமது வாழ்வையும் பணியையும் வழிநடத்துகின்றன? திருவழிபாட்டில் அனைவருடைய பங்கேற்பையும் எவ்வாறு உறுதி செய்வது?

17. 5. மறைப்பணியில் உடன் பொறுப்பு : திருஅவையின் பணிக்காகவே கூட்டொருங்கியக்கம் இருப்பதால், திரு அவையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் பங்கேற்கும் பொறுப்பு உண்டு. எவ்வாறு திருமுழுக்கு பெற்றவர் நற்செய்தி அறிவிப்புப் பணியில் பங்கேற்கிறார்? இப் பணியில் நம்மால் முழுமையாக ஈடுபட முடிகிறதா? நமது சமுதாயத்திற்கு நாம் ஆற்றும் பல்வேறு பணிகளில் (சமூக அரசியல் ஈடுபாடு, அறிவியல் ஆராய்ச்சி, கல்வி, சமூக நீதிக்காக உழைத்தல், மனித உரிமைகளைக் காத்தல், சுற்றுச் சூழலைப் பேணுதல் போன்றவை) நமது சமூகம் நமக்கு உறுதுணையாக உள்ளதா? சமூகத்திற்கு பணியாற்ற எந்தெந்த வழிகளில் நாம் ஒருவருக்கொருவர் உதவியாய் இருக்க முடியும்?

17. 6. திருஅவையோடும் சமூகத்தோடும் உரையாடல் : மக்களின் அனுபவங்களை ஒன்று சேர்க்கும் வழியாக கலந்துரையாடல் அமைய வேண்டும். எவ்வாறு நம் சமூகத்தில் உள்ள பலதரப்பட்ட மக்கள் உரையாட ஒன்றுகூடுகின்றனர்? நம் தலத் திருஅவையில் உரையாடலுக்கென உள்ள இடங்களும், வழிமுறைகளும் யாவை? எவ்வாறு அருகிலுள்ள பங்குகளும் மறைமாவட்டமும் இந்த உரையாடலுக்கு உதவியாக உள்ளன? திருஅவையில், சமூகத்தில் உள்ள எந்தெந்த பிரச்சினைகளுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும்? பிற மதங்களில் உள்ள நம்பிக்கையாளருடனும், நம்பிக்கை இல்லாதவருடனும் உரையாடல் நிகழ்த்திய அனுபவமும் ஒத்துழைப்பும் என்ன? சமூகத்தின் பல்வேறு துறைகளான அரசியல், பொருளாதாரம், பண்பாடு, போன்றவற்றோடும், வறுமை நிலையில் வாழ்வோரோடும் திருஅவை எவ்வாறு உரையாடலில் ஈடுபடுகிறது?

17. 7. பிற கிறித்தவ சபைகளோடு உரையாடல் : திருமுழுக்கால் இணைந்துள்ள பல்வேறு கிறித்தவ சபைகளோடு உரையாடல் நிகழ்த்துவது நம் பயணத்திற்கு இன்றியமையாதது.

பிற கிறித்தவ சபைகளோடு திருஅவை கொண்டுள்ள உறவு எத்தகையது? அவர்களோடு என்ன பகிர்கின்றோம்? எவ்வாறு உடன் பயணம் செய்கின்றோம்? ஒன்றாக பயணிப்பதால் ஏற்படும் நன்மைகள் என்ன? நாம் சந்திக்கும் பிரச்சினைகள் யாவை? ஒன்றாக முன்னோக்கிப்பயணம் செல்ல நாம் முன்னெடுக்க வேண்டிய முயற்சிகள் யாவை?

17. 8. அதிகாரமும் பங்கேற்பும் : கூட்டொருங்கியக்கத் திருஅவை பங்கேற்கும், பொறுப்புள்ள திரு அவையாக உள்ளது.

* நமது திருஅவை நாம் அடைய வேண்டிய இலக்குகளையும், அவற்றை அடையத் தேவையான வழிகளையும், எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் எவ்வாறு அடையாளம் கண்டுகொள்கிறது? தலத் திருஅவையில் அதிகாரமும் நிர்வாகமும் எவ்வாறு உள்ளது
* இணைந்து செயல்படுகிறோமா, உடன் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறோமா? திறனாய்வு செய்கிறோமா? அதை யார் செய்வது?
* எவ்வாறு பொதுநிலையினருக்கான பணிகளையும், பொறுப்புணர்வையும் ஊக்குவிக்கிறோம்?
* தலித் திருஅவையில் கூட்டொருங்கியக்க அனுபவங்கள் ஏற்பட்டுள்ளனவா? பங்குப் பேரவைகளும், மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவையும் பயனளிக்கின்றனவா?
* நமது பங்கேற்பிலும், தலைமைப் பொறுப்பிலும் இன்னும் எந்த அளவுக்கு கூட்டொருங்கியக்கத்தை வளர்த்தெடுக்க முடியும்?

17. 9. தேர்ந்து தெளிதல், முடிவெடுத்தல் : தூய ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்து, தேர்ந்து தெளிந்து முடிவுகளை எடுப்பது கூட்டொருங்கியக்கத்தின் பாணி ஆகும்.

முடிவுகள் எடுக்க எத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றுகிறோம்? எவ்வாறு அவற்றை மேம்படுத்தலாம்? திருஅவையின் அமைப்புகளில் முடிவுகள் எடுக்க பங்கேற்பை ஊக்குவிக்கிறோமா? நாம் முடிவுகள் எடுக்கும் வழிமுறைகள் அனைத்தும் இறைமக்களுக்கும் செவிமடுக்க உதவியாக உள்ளனவா? கருத்துக் கேட்பதற்கும் முடிவுகள் எடுப்பதற்கும் உள்ள உறவு என்ன? வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பேற்புக்கு நாம் பின்பற்றும் வழிமுறைகள் யாவை? சமூகமாக தேர்ந்து தெளிவதில் எவ்வாறு வளரலாம்?

17. 10. கூட்டொருங்கியக்கமாக உருவாதல் : நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்பதே நமது ஆன்மீகமாகும். எவ்வாறு நமது இறைச் சமூகம் மக்கள் அனைவரும் ஒன்றாகப் பயணிக்க, ஒருவர் ஒருவருக்கு செவிமடுக்க, மறைப்பணியில் பங்கேற்க, உரையாடலில்

ஈடுபட இறைமக்களை உருவாக்குகிறது? தேர்ந்து தெளியவும், கூட்டொருங்கியக்க முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்தவும் அளிக்கப்படும் உருவாக்கம் என்ன?

18. எவ்வாறு கூட்டொருங்கியக்கத் திருஅவையாக மாறுவது?

1. ஆண்டவரின் ஆவியானவர் வரலாற்றில் திருஅவையின் பயணத்தை எவ்வாறெல்லாம் வழிநடத்தி வந்துள்ளார் என்பதையும், இன்று இறையன்புக்குச் சான்று பகர நம்மை அழைக்கின்றார் என்பதையும் நினைவு கூர்வது.
2. பல்வேறு காரணங்களுக்காக சமுதாயத்தின் விளிம்பு நிலையில் இருப்போரும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் வாய்ப்பினைப் பெறவும், இறைமக்களின் வளர்ச்சிக்காக உதவிடும் வகையில் பங்கேற்பு செயல்முறையில் ஒட்டுமொத்த மனிதக் குடும்பத்தின் நன்மைக்காகவும் தூய ஆவியானவர் பொழியும் பல்வேறு அருட்கொடைகளைக் கண்டுகொண்டு ஊக்குவிப்பது.
3. நற்செய்தி அறிவிப்பதில் பொறுப்புடன் செயல்பட பங்கேற்பு வழிகளை ஆராய்வது, மேலும் அழகான, வாழ்வதற்கு உகந்த உலகைக் கட்டி எழுப்புவது.
4. திருஅவையில் பொறுப்பும் அதிகாரமும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஆய்வு செய்து, நற்செய்தியில் வேரூன்றாத முற்சார்பு எண்ணங்களையும், சிதைந்த பழக்கங்களையும் மாற்றியமைப்பது.
5. சமூக உரையாடல், நலம் பெறுதல், ஒப்புரவு, ஒன்றிணைத்தல், பங்கேற்பு, மக்களாட்சியை மீண்டும் கட்டியெழுப்புவது, சகோதரத்துவத்தையும், சமூக நட்பையும் ஊக்குவிக்கும் நம்பகத் தன்மையுள்ள கிறித்தவச் சமூகத்தை அங்கீகரிப்பது.
6. கிறித்தவ சமூகங்களிடையே, மற்ற சமூகக் குழுக்களுக்கு இடையே நிலவும் உறவுகளைப் புதுப்பிப்பது.
7. மறைமாவட்ட அளவில், கண்டம் வாரியாக, அகில உலகத் திரு அவையில் நடைபெறும் மாமன்ற அனுபவங்களில் கிடைத்த பலன்களை நமதாக்கிக் கொள்வது

## PROCURATOR'S OFFICE
## Good Friday Collection

| S.No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Koratampet | 44770 |
| 2 | Bagayam | 25350 |
| 3 | Cathedral | 41767 |
| 4 | Randamkorattur | 5630 |
| 5 | Sathuvacharry | 15100 |
| 6 | A.Kattupadi | 24300 |

| | | |
|---|---|---|
| 7 | C.Nammiandal | 105000 |
| 8 | Melpudupakkam | 5000 |
| 9 | Thirumalpadi | 4350 |
| 10 | Thiruvannamalai | 40000 |
| 11 | Ranipet | 30070 |
| 12 | Gudiyatham | 13330 |
| 13 | Kasthambadi | 10140 |
| 14 | Devigapuram | 8200 |
| 15 | Parasur | 2000 |
| 16 | Viruduvilanginan | 12000 |
| 17 | Mazhuvankarunai | 22300 |
| 18 | Gengapattu | 27742 |
| | Total | 437049 |

| S.No | Religious | Amount |
|---|---|---|
| 1 | St.Louis Convent - A.Kattupadi | 2000 |
| 2 | SD Convent - Sennathur | 1500 |
| 3 | L.F.C - Ranipet | 3000 |
| 4 | L.F.C - Ammoor | 3000 |
| | Total | 9500 |

Thanks for all those who have alredy remitted the Good Friday Collection and May I request to give those who have not yet given.

## COMMUNIO INDIA

| S.No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | A.Kattupadi | 3150 |
| 2 | Thiruvannamalai | 5000 |
| 3 | Gudiyatham | 10000 |
| 4 | Viruduvilanginan | 6800 |
| 5 | Gengapattu | 7920 |
| | Total | 32870 |

Thanks for your generous contribution for Mission Sunday Collection. Those who have not yet sent Mission Sunday Collection,

**Very Rev. Fr. A.Kulandesu**
Procurator

# மறைவட்ட அளவில் குருக்களுக்கான ஆயர் மாமன்ற கருத்தரங்கு

நமது மறைமாவட்டத்தில் உலக ஆயர்கள் மாமன்றமானது 28 அக்டோபர் 2021 அன்று மறைமாவட்ட பேராலயத்தில் தொடங்கப்பட்டது. ஆயர் மாமன்றத்தின் கருப்பொருளாகிய **கூட்டொருங்கியக்க திருஅவைக்காக: ஒன்றிப்பு, பங்கேற்பு, மறைத்தூதுபணி** எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்பதும் நாம் எவ்வாறு ஒன்றிணைந்து பயணிக்கின்றோம் மட்டுமல்லாது எல்லோரும் இணைந்து கூடிவந்து தங்களின் நம்பிக்கை பயண அனுபவங்களை பகிர்ந்துக் கொள்ள வேண்டும் என்பதும், ஒருவர் ஒருவருக்கு செவிமடுத்தல் வேண்டும் என்பதுமான ஆயர் மாமன்ற அழைப்பினை ஏற்று இவற்றிலிருந்து நமது மறைமாவட்டம் இணைந்து பயணிப்பதற்கான பாதையை கண்டறிய வேண்டும் என்பதும் இம்மாமன்றத்தின் முக்கிய நோக்கமாகும்.










ஆயர் மாமன்றத்தின் கருப்பொருள் இறைமக்களை சென்றடைவதில் பங்குத்தந்தையர்களின் செயல்பாடுகள் பங்கு மிகவும் இன்றியமையாதது. எனவே இதை










ஆயர்கள் மாமன்றம் (Synod) - 2021 - 2023
வேலூர் மறைக்கோட்டம்
நாள் : 03.12.2021 நேரம் : காலை 9.30 மணி
பேரருட்தந்தை Msgr. I.ஜான் ராபர்ட்
Msgr. M.ஜோ லூர்துசாமி
அன்புடன் அழைக்கின்றோம்...! வேலூர் மறைக்கோட்ட குருக்கள்


 

செயல்படுத்த ஒவ்வொரு மறைவட்ட அளவிலும் குருக்களுக்கு, ஆயர் மாமன்றம் பற்றிய கருத்தமர்வும் கலந்தாய்வும் நடத்த ஆயர் மாமன்ற ஒருங்கிணைப்புக் குழுவால் திட்டமிடப்பட்டது. அதன்படி ஒவ்வொரு மறைவட்டத்திலும் நவம்பர் மாதம் முழுவதும் ஆயர் மாமன்ற ஒருங்கிணைப்புக் குழு பங்குத்தந்தையர்களை சந்தித்து ஆயர் மாமன்றத்தைப்பற்றிய கருத்தமர்வும் கலந்தாய்வும் நடத்தினார்கள். ஆயர் மாமன்ற ஒருங்கிணைப்புக் குழுவானது இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் நான்கு மறைவட்டங்களில் பங்குத்தந்தையர்களுக்கு கருத்தமர்வுகள் நடத்தினார்கள். எல்லா மறைவட்ட அமர்வுகளிலும் மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு ஐ. ஜான் ராபர்ட் அவர்கள் தொடக்க உரையாற்றி கருத்தமர்வுகளை தொடங்கி வைத்தார். அருட்பணி. மங்களம் தாவீது, அருட்பணி. ஜெகதீஷ், அருட்பணி. ரமேஷ் அடங்கிய முதல் குழுவானது திருப்பத்தூர், அரக்கோணம், சேத்துபட்டு மற்றும் வேலூர் மறைவட்ட குருக்களுக்கு கருத்தமர்வு நடத்தினார்கள். ஆயர் மாமன்றத்தின் நோக்கம், முக்கியத்துவம் மற்றும் ஆயர் மாமன்றத்தின் செயல்பாடுகள் பற்றி அறிமுக உரையை ஒருங்கிணைப்பாளர் முனைவர் அருட்பணி. ரமேஷ் அந்தோணி உரையாற்றினார். பின்பு ஆயர் மாமன்ற தயாரிப்பு ஏட்டில் உள்ள இறையியலை முனைவர் அருட்பணி. மங்களம் தாவீது விளக்கினார். பின்பு ஆயர் மாமன்றத்தின் கருப்பொருளை விளக்கி கலந்தாய்வின்போது நினைவில் கொள்ள வேண்டிய கொள்கைகள், தவிர்க்கப்பட வேண்டிய மனநிலைகளும் சூழ்நிலைகளும், ஆயர் மாமன்றத்தின் நடைமுறைகளைப்பற்றிய கருத்துகளை முனைவர் அருட்பணி. ஜெகதீஷ் விளக்கினார். பின்பு ஆயர் மாமன்றம் வலியுறுத்தும் கருப்பொருளை மையமாக வைத்து 8 கேள்விகள் அருட்பணியாளர்களுக்கு கொடுக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

அருட்பணி. சுந்தர் ச.ச, இல்லத்தந்தை, தொன்போஸ்கோ அருட்பணி. பன்னீர்செல்வம், மறைவட்ட முதன்மை குரு, வந்தவாசி மற்றும் திரு. பெலவேந்திரம், தலைமை ஆசிரியர், அடங்கிய இரண்டாம்குழுவானது வேட்டவலம், வந்தவாசி, போளூர் மற்றும் திருவண்ணாமலை மறைவட்டங்களில் இருக்கின்ற மறைவட்ட குருக்களுக்கு கருத்து அமர்வு நடத்தினார்கள். திரு. பெலவேந்திரம் த.ஆ அவர்கள் ஆயர் மாமன்றத்தின் வரலாறு, நோக்கம், மற்றும் ஆயர் மாமன்றத்தின் எதிர்பார்ப்புகளைப்

பற்றி உரையாற்றினார். ஆயர் மாமன்றத்தின் இறையியல், கலந்தாய்வில் ஒருவர் கொள்ள வேண்டிய மனநிலைகள் தவிர்க்கப்பட வேண்டிய சூழ்நிலைகள் பற்றி அருட்பணி. சுந்தர் ச.ச, விளக்கி கூறினார். அருட்பணி. பன்னீர்செல்வம் அவர்கள் ஆயர் மாமன்ற கருப்பொருளை உள்ளடக்கிய கேள்விகளை விளக்கி குழு ஆய்விற்கு எல்லோரையும் வழிநடத்தினார்கள். மறைவட்ட அளவிலான இக்கருத்தமர்வுகள் முழுமையாக நடைபெற தலைமை தாங்கி உடனிருந்து உற்சாகப்படுத்திய நமது மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு ஐ. ஜான் ராபர்ட் அவர்களுக்கும், நிகழ்ச்சி மற்றும் உணவு ஏற்பாடுகளை செய்து கொடுத்த அனைத்து மறைவட்ட முதன்மை குருக்களுக்கும், ஆர்வமுடன் பங்கேற்று ஒத்துழைப்பு தந்த அனைத்து பங்குத்தந்தையர்களுக்கும், ஆயர் மாமன்ற ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அருட்பணி. முனைவர் **L.இரமேஷ் அந்தோணி**
இயக்குநர், மேய்ப்புப்பணி நிலையம், வேலூர்.

## வேதியர்களுக்கான ஆயர் மாமன்ற கருத்தரங்கு மற்றும் கிறிஸ்மஸ் விழா

அன்புள்ள பங்குதந்தை மற்றும் வேதியர்கள் அவர்களுக்கு,

மேய்ப்புப்பணி மையத்திலிருந்து செபங்களும் வாழ்த்துக்களும்!

திருமுழுக்கு பெற்ற எல்லோரும் திருஅவையின் வாழ்விலும் பணியிலும் பங்கேற்கின்றார்கள். திருஅவையின் பணிவாழ்வில் நாம் இணைந்து பயணிக்க வேண்டும். இப்பயணத்தில் தோழமையும், பங்கேற்பும் நற்செய்தி அறிவிப்பும் மிகவும் இன்றியமையாதது. இக்கருத்தை பிறரோடு பகிர்ந்துக் கொள்ளவும் பிறருக்கு செவிமடுக்கவும் நம்மை உலக ஆயர் மாமன்றம் 2021-2023 வாயிலாக நம்மை அழைக்கிறார் நம் திருதந்தை பிரான்சிஸ். ஆயர் மாமன்ற கருத்தரங்கு மற்றும் கிறிஸ்மஸ் விழா கொண்டாட்டத்திற்கும் அனைத்து வேதியர்களையும் **(ஒய்வு பெற்ற வேதியர்கள், பயிற்சி பெற்ற வேதியர்கள் மற்றும் மறைமாவட்டத்தின் வழியாக ஊதியம் பெறும் வேதியர்கள்)** இவ்விழாவிற்கு தவறாமல் அனுப்பி வைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நாள் : 14.12.2021 - செவ்வாய்க்கிழமை
நேரம் : காலை 9.30 மணி
இடம் : ஆயர் இல்லம் - வேலூர்

தலைமை : பேரருட்திரு ஐ. ஜான் ராபர்ட்,
மறைமாவட்ட பரிபாலகர்

அருட்பணி. முனைவர் **L.இரமேஷ் அந்தோணி**
இயக்குநர், மேய்ப்புப்பணி நிலையம், வேலூர்.

## குடும்பநலப் பணிக்குழு

திருமணத் தயாரிப்பு வகுப்புகள்
அன்பு பங்குத்தந்தையர்களே!
உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்!
திருமணத் தயாரிப்பு வகுப்புகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து தங்கள் பங்கு இளையோர்களை தவறாமல் அனுப்பிவைப்பதற்காக உங்களை மனதார பாராட்டுகிறேன்.
தற்போது 80% பங்கைச் சார்ந்த இளையோர் திருமணத் தயாரிப்பு வகுப்பில் தவறாது பங்கு கொள்கின்றனர். இன்னும் இருக்கின்ற 20% பங்குகள் பங்கு கொண்டால் மிகவும் சிறப்பாக இருக்கும். எனவே பங்குத்தந்தையர்கள் தங்கள் பங்கு இளையோரை உற்சாகப்படுத்தி அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
டிசம்பர் மாதம்
04.12.2021 உலக மாதா ஆலயம், திருவண்ணாமலை
18.12.2021 ஆயர் இல்லம், வேலூர்
நேரம் : காலை 9.00 முதல் மாலை 4.00 மணிவரை
ஜனவரி மாதம்
08.01.2022 உலக மாதா ஆலயம், திருவண்ணாமலை
15.01.2022 ஆயர் இல்லம், வேலூர்
நேரம் : காலை 9.00 முதல் மாலை 4.00 மணிவரை
குறிப்பு : முக கவசத்தோடு திருமண வகுப்பிற்கு வரவும்.
தொடர்புக்கு : பேரருட்பணி **L.இரமேஷ் அந்தோணி** - 98948 91490
திரு. **சாமுவேல்,** வேதியர் - 90478 90703
அருட்பணி. முனைவர் **L.இரமேஷ் அந்தோணி**
இயக்குநர், மேய்ப்புப்பணி நிலையம், வேலூர்.

## RCM Schools

**TRIPLE functions** like **SYNODAL meeting, Administrative Meeting** for the 80 Headmasters of the Diocese of Vellore and **Distribution of the Flood relief things** for 30 poor families were organized very well by the Manager of RCM schools and the

Teacher's Association **0n 29.11.2021**.in the Jubilee Hall, Bishop's House, Vellore.

At 10:30 am Synodal Meeting started with a song and prayer. Followed by our **Diocesan Administrator Very Rev. Msgr. I. John Robe**rt in his inaugural address, stressed the importance and need of the Synod – (2021-2023). And then the Synodal Special Resource persons **Mr. S. Belavendiram**, Secretary, Vellore Laity Commission and **Very Rev. Fr. F. Sundar** SDB, Rector, Don Bosco Katpadi shared - How in the spirit of Jesus – and the Church and the guidance of the Holy spirit, we can prepare ourselves in regenerating relationship, the call to journey together, Theology of Synod and the important guidelines for the Synod were deeply explained by them. **Very Rev. Fr. L. Ramesh** Co-ordinator of the Synodal Programmes – Diocese of Vellore, encouraged the participants in his sharing. Then **Very Rev Fr. D. Panner Selvam** V.F. Vandavasi, divided the 75 Headmasters in to 4 small groups and Questioner was given to them for the group discussion in which the participants actively participated and submitted the group reports at the end.





After lunch break at 2:30pm **Very Rev.Fr. S. Clement Rosario**, Manager, RCM Schools, Vellore explained to the Headmasters regarding their duties, responsibilities and the present problems like court cases and challenges we face in the Educational Departments and some of the future problems in the field of education. And then our Diocesan Administrator **Very Rev. Msgr. I. John Robert** addressed all the Headmasters and inviting them to work with responsibility and dedication for the development of the schools and the children and to cooperate with parish priests, correspondents and the management. From the generous contributions given by the teachers of the diocese of Vellore, 30 packages of Rice and other grocery things with Rs. 500/- were distributed to 30 poor families

who were affected by the flood, by our diocesan Administrator, Manager and some of the Headmasters. Then group photos of the Headmasters were taken and with the final prayer then programmes came to an end. I do appreciate then and congratulate all the Teacher's Association office bearers, all the Headmasters, Master Anand office staff, and Mr. Rosario for their valuable and kind co-operation in making the programme a grant success.

**Fr. S. Clement Rosario**
Manager,
RCM Schools, Vellore-1.

## VELLORE & THIRUVANNAMALAI SOCIAL SERVICE SOCIETY

21.11.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று பேரருட்திரு. ஜேம்ஸ் **VSSS/TVMSS** இயக்குநர் அவர்கள் **VSSS, RCCE** 15 தொடர்பு தொண்டர்களுக்கு கோவித்-19 சுகாதார உபகரணங்களை வழங்கினார்.

**பேரிடர் கால மக்கள் விழிப்புணர்வு**

காரிதாஸ் - சி.ஆர்.எஸ். - டாசோஸ் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் பேரிடர் கால மக்கள் விழிப்புணர்வு (கொரோனா) தொடர்பு தொண்டர்கள் கைபேசியின் வழியாக விழிப்புணர்வு அளித்தார்கள்.

**மழை, வெள்ள நிவாரண உதவி**

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, வீடுகள் இடித்து சேதாரமான, வருமானம் ஈட்ட முடியாத, மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள சேண்பாக்கம், திருமால்பாடி, மழுவங்கருணை, வந்தவாசி, ஆரணி, சோகனூர் ஆகிய பங்குகளில் உள்ள





முதியோர், விதவைகள் இவர்களை வேலூர், திருவண்ணாமலை சமூக சேவை சங்கங்களின் இயக்குநர் பேரருட்திரு. ஜேம்ஸ் அவர்கள் நேரடியாக பார்வையிட்டு, பங்குதந்தையர்கள் வழியாக நிவாரண உதவி வழங்கினார்.

முக்கிய அறிவிப்பு

**TNBC Group – IV – VAO** பணி நுழைவுத்தேர்வுக்கான சிறப்பு பயிற்சி 2022 சனவரி முதல் வாரத்தில் திறமையான கருத்தூட்டுனர்களால் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இச்செய்தியை தங்கள் பங்கில் உள்ள தகுதியும், ஆர்வமும் உள்ள இளைஞர்களுக்கு அறிவிப்பு செய்து, டிசம்பர் மாத இறுதிக்குள் தங்களுடைய பெயர்களை கீழ்காணும் நபர்களை தொடர்புகொண்டு பதிவு செய்து பயனடைய அழைக்கிறோம்.

திரு. லூயிஸ் - 94432 32492
திரு. இன்பசேகர் - 94428 01283

செய்தி தொகுப்பு
திரு. **A.**பேட்ரிக் &
திரு. **T.**இன்பசேகர்
**VSSS & TVMSSS** திட்டமேலாளர்கள்

பேரருட்திரு. **S.**ஜேம்ஸ், **MSW**
இயக்குநர், **VSSS & TVMSSS**
ஆயர் இல்லம், வேலூர்

## Laity Commission

**Dear Rev. Fathers,**

Greetings in the name of our Lord Jesus Christ and wish you all a Merry Christmas and Prosperous New Year – 2022. I, the Laity Commission Secretary take this opportunity to thank you all for the wonderful support that you are rendering for this commission. Lay faithful are the church, so we have to give faith formation and allow them to actively participate in the gospel ministry.

Our beloved pope Francis invites the lay faithful to regenerate their relationship with one another, journeying together in the synodal path, make use of the gifts and talents for the cause of synodality, sharing the power in decision making and being the voice of the voiceless. Let us work together and allow our brothers and sisters to take part in the missionary work of evangelization in our parishes. Hence, I humbly make the following requests:

1. Kindly send two lay persons' name and address who are really active, strong in faith and co-operative in parish activities. (2 – Men, 2 – Women, 2 – youth boys, 2 – youth girls).
2. Seminars on synod 2021-2023 will be organized later and you will be duly informed about it later.

3. Resource person’s certificate course will be conducted on 22, January, 2022. Kindly send Four interested participants from your parish with details to this above said address.

**Kindly send all the correspondences to this address:**
Secretary,
Laity commission
34, officers Line
Vellore – 632001
or you can send through whatsapp : 9489579829
Praying and craving your blessings

**Yours in Christ,**
**Mr. Belevendiram,**
**Secretary, Laity commission**

## புனித வின்சென்ட் தே பவுல்

போளூர் திரு இருதய கிளைச்சபை
போளூர் திரு. பர்த்தலோமியோ மூத்த வின்செந்தியரின் நினைவேந்தல் நிகழ்வு 31.10.2021 ஞாயிறன்று நடைபெற்றது. அன்னாரின் நினைவேந்தல் நிகழ்வில் சபையின் சார்பில் சகோ. அ.தோம்னிக் அன்னாரின் நினைவுகளை நினைவு கூர்ந்தார். அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கப்பட்டது. மத்திய சபைத் தலைவர் ம.சார்லஸ் ஆரோக்கியராஜ், பொருளர் மு.செயபால், மூத்த துணைத் தலைவர் அ.தோம்னிக், வேலூர் வட்டாரத் தலைவர் சகோதரி கிளாரா மெட்டில்டா, போளூர் கிளைச்சபைத் தலைவி அந்தோணியம்மாள், எடல், ஜெயசீலி, தானிப்பாடி வட்டாரத் தலைவர் த.ரமேஷ் ஆகியோர் கலந்துகொண்டு செபித்து சிறப்பித்தனர்.

**கல்வி உதவித்தொகை படிவங்கள்**
இந்திய தேசியசபைத் தலைவர் சகோ ஜீட்மங்கள் மற்றும் கல்வி அலுவலர் சகோ அந்தோணிராஜ் அறிவுரை ஆலோசனைப்படி (உயர்கல்வி - தொழிற்கல்வி - வித்யஜோதி) புதிய கல்விப் படிவங்கள் மத்திய சபையில் உள்ளவர்களுக்கும், வட்டார பொறுப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 21 முதல் 25 ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. அவைகளை எட்டு வட்டாரங்களிலிருந்தும் தொகுக்கப்பட்டடு இம்மாதம் (நவம்பர் மாதம்) இறுதிக்குள் இந்திய தேசிய சபைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

**பள்ளிகொண்டா புனித குழந்தை தெரேசாள் கிளைச்சபை**

14.11.2021 ஞாயிறு மாலை 5.00 மணியளவில் வேலூர் வட்டார சபைக்குட்பட்ட பள்ளிகொண்டா புனித குழந்தை தெரேசா கிளைச்சபையின் கூட்டம் வட்டாரத் தலைவி கிளாரா மெட்டில்டா தலைமையில் நடைபெற்றது. பங்குதந்தை அற்புதராஜ் அடிகளார் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிளைச்சபை உறுப்பினர்களுக்கு சபையின் மாண்பு, செயல்பாடுகள் பற்றி விளக்கப்பட்டது. சிறப்பு அழைப்பாளர்களாக, மத்தியசபைத் தலைவர் ம.சார்லஸ் ஆரோக்கியராஜ், மூத்த துணைத்தலைவரும் தேர்தல் அலுவலருமான சகோ அ.தோம்னிக், மத்தியசபை பொருளாளர், மு.ஜெயபால், கல்வி அலுவலர் ச.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். கிளைச்சபைத் தலைவராக சகோ. இருதயராஜ், துணைத்தலைவராக குமார், செயலராக சோறு சிட்டிபாபு, பொருளராக பாலாஜி ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். பங்குத்தந்தை அற்புதராஜ் இறுதி செபம் கூறி ஆசீர்வதிக்க இனிதே கூட்டம் நிறைவுபெற்றது.

பேரருள்திரு. **ஜெ.ஜெயபிரகாசம்**
இயக்குநர், பக்த சபைகள்

**ம.சார்லஸ் ஆரோக்கியராஜ்**
தலைவர், வேலூர் மத்திய சபை

## மரியாயின் சேனை வேலூர் கொமித்சியம்

மரியாயின் சேனை தொடங்கி நூறு ஆண்டுகள் 7.9.2021ல் நிறைவுபெற்ற நிலையில் நமது வேலூர் மறைமாவட்டத்தில், எல்லா கியூரியாக்கள், பிரசிடியங்கள் அந்த நாளை பங்குத்தந்தையோடு இணைந்து சிறப்பாக கொண்டாடினர்.

வந்தவாசி கியூரியாவில் பாதிரியில் பங்கில் மறைகோட்ட முதல்வர் பேரருட்பணி பன்னீர் செல்வம் அவர்களின் தலைமையில், பக்த சபைகளின் இயக்குனர் பேரருட் பணி ஜெயபிரகாசம் அவர்கள் முன்னிலையில் இவ்விழா ஆடம்பரமாக கொண்டாடப்பட்டது அப்போது அன்னை மாமரியின் திருத்தேர் பவனி, சிறப்பு ஆராதனை, ஜெபமாலை, கலை நிகழ்ச்சிகள் சேனை நிறுவனர் பிராங்டப் அவர்களின் வாழ்க்கை வரலாறு, சேனையின் நோக்கம், குறிக்கோள், உறுப்பினர்கள் செய்ய வேண்டிய சேவைகள், கடைபிடிக்கவேண்டிய முக்கிய கடமைகள் மற்றும் நற்செய்தியில் அன்னையின் பங்கு பற்றி தந்தையர்கள் எடுத்துரைக்க, கலை நிகச்சியில் பங்கேற்ற சிறார்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. 100க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. தலைமை ஏற்று வழிநடத்திய பேரருட்தந்தை பன்னீர்செல்வம் அவர்களுக்கு கொமித்சியத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

மரியாயின் சேனையின் நூற்றாண்டு நிறைவு விழா காட்பாடி கியூரியா பேரருட்பணி மார்டின் அடிகளார் தலைமையில் விழா ஆரம்பமானது. முதலில் கொடி ஏற்றம், ஆலயம் சுற்றி அன்னையின் தேர்பவனி வாக்குறுதி புதுப்பித்தல் சிறப்புத் திருப்பலி சிறப்பிக்கப்பட்டது.

காட்பாடி கியூரியா கீழ் இயங்கும் பிரிசிடியங்கள் சேனையாளர் வெகு ஆடம்பரமாக சிறப்பித்தனர். இவை அனைத்து ஏற்பாடுகளும் பங்குதந்தையோடு இனைந்து கியூரியா தலைவி விக்டோரியா ஆசிரியை, சகோ. மேரி ஜெசிந்தா மற்றும் பொறுப்பாளர்களுக்கு நன்றியும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது, இதில் அருட்சகோதரிகளும் பங்கேற்றனர், வருகைதந்த அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது சிறப்பாக ஏற்பாடு செய்த தந்தைக்கும், கியூரியா பொறுப்பாளர்களுக்கும் கொமித்சியத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

3. குடியாத்தம் பங்கு தூய திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் பேரருட்பணி அக்டோவியஸ் தலைமையில் பக்த சபை இயக்குநர் தந்தை ஜெயபிரகாசம் அடிகளார் முன்னிலையில் ஜெபமாலையுடன் அன்னையின் திருவுருவத் தேர்பவனி ஆலயத்தை சுற்றிவந்த பின்பு சேனையர்கள் வாக்குறுதி புதுப்பிக்க ஆடம்பர சிறப்பு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலியில் முன்னுரை வாசகங்கள், பாடல்கள், மன்றாட்டுக்கள் அனைத்திலும் மரியாயின் சேனையார் பங்கேற்று நடத்தியது சிறப்பாக இருந்தது. அனைத்து ஏற்பாடுகளையும் மிகச் சிறப்பாக செய்த பேரருட்தந்தைக்கு இருகரம் குவித்து நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.

4. சேண்பாக்கம் புனித வளனார் பங்கில் பேரருட்பணி தங்கராஜ் அடிகளார் தலைமையில் பக்த சபை இயக்குநர் பேரருட்பணி ஜெயபிரகாசம் அடிகளார் முன்னிலையில் சேனை நூற்றாண்டு நிறைவு விழா ஜெபமாலையுடன் ஆரம்பமானது அன்று மறைபரப்பு ஞாயிறும் கொண்டாடப்பட்டது.

சேனையார் தங்கள் அரசியை பூக்களாலும் வண்ண விலக்குகளாலும் பீடத்தின் முன் அலங்கரித்திருந்தனர். முன்னுரைகள், வாசகங்கள் மன்றாட்டுகள் அனைத்திலும் சேனையர் முன்னின்று நடத்தினர். அருட்தந்தை ஜெயபிரகாசம் இப்பங்கில் இளையோர் பிரசிடியம் தொடங்க அதற்கான முயற்சி எடுக்க பங்குதந்தையோடு இனைந்து சேனையார் ஒத்துழைக்க கேட்டு கொண்டார். கொமித்சியத் தலைவி சேனையின் நூற்றாண்டு நிறைவின் தொடக்கமுதல் சேனையார் ஆற்றிய தியாகம், கையளிப்பு சேனையின் புனித தன்மையை சுருக்கமாக விளக்கி சேனையார் அமல உற்பவ அன்னை சுரூபம் முன் மெழுகுதிரி ஏற்றி தங்கள் அரசிக்கு வாக்குறுதியை புதுப்பிக்க உதவினார். திருப்பலிக்குப்பின் வருகைதந்த அனைவருக்கும் சிற்றுண்டி, இனிப்புகள்

வழங்கப்பட்டது. மிக சிறந்த முறையில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பங்குதந்தைக்கு கொமித்சியத்தின் சார்பில் பக்தசபை தந்தையால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

## மறைவட்ட செய்திகள்

## Special Events in Shenbakkam Parish
## Legion of Mary World 100th year and Mission Sunday Celebration



On Sunday, 7 Nov. 2021 in Shenbakkam Parish we have celebrated the 100th year of Legion of Mary. The diocesan director for Pious Associations Rev. Fr. J. Jeyaprekasam concelebrated mass in the pariah church. The Vellore central presidium leaders along with the parish comitsium gathered prayed and took oath during mass. The director explained the importance of Mission Sunday and Legion of Mary. After mass, snacks were served to the parishioners.

**<u>Concluding the year of St. Joseph</u>**

St. Joseph being the patron of our church, on Sunday 14, Nov. 2021 we have concluded the year of St. Joseph in our parish. We had inaugurated the year in January 2020, thereafter every month on first Wednesday we had special Adoration, Mass and Preaching by the parish priest. As the year is going to end we have planned to conclude the year of St. Joseph before the Advent begins. Accordingly we had the concluding celebration on Sunday 14, Nov. 2021. On that day we had one day ***"Dhiyanam"*** for the parishioners and Rev. Fr. Octavious preached and prepared the people from 9.30 am to 4.00 pm. At 4.20 pm Rev. Msgr. I. John Robert, Diocesan Administrator arrived and concelebrated the mass. In his homily he preached about

St. Joseph and highlighted St. Joseph as: 1. A good man 2. A good husband and 3. A good father.

After mass the Diocesan Administrator appreciated the parish priest for his interest and effort to celebrate the year of St. Joseph and conclude it meaningfully and fruitfully and thanked him for his wonderful ministry. He also congratulated the parishioners for their active involvement. Rev. Fr. Sigamani, the diocesan Admin secretary joined in our joy and concelebrated mass with us. Thus, the year of St. Joseph was concluded in our parish successfully.

**Rev. Dr. Thangaraj, PP.**
**Shenbakkam**

## அருளடையாள கொண்டாட்டம் கிறித்தவர்களின் சகாய அன்னை பங்கு ஆலயம், வாணியம்பாடி






28.11.2021 அன்று ஞாயிறு காலை 8.00 மணியளவில் நமது பாசமிகு வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்தந்தை ஐ. ஜான் ராபர்ட் அவர்கள் எம் பங்கிற்கு வருகை தந்தார்கள். இறைமக்களோடு சேர்ந்து பங்குத்தந்தை அவர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்றார்கள். பிறகு மேள தாளம் முழங்க அருளடையாளம் பெற இருந்த மாணவ மாணவிகள், இறைமக்கள் பரிபாலகரோடு பெருமகிழ்வுடன் திருப்பலி கொண்டாட்டத்தில் பங்கு பெற்றார்கள். மறையுரையின் கடைசி பகுதியில் மாணவ மாணவிகளின் மறையறிவை சோதிக்கும் வகையில் கேள்விகள் கேட்கப்பட்டது. மிகவும் சிறந்த முறையில் மாணவச் செல்வங்கள் பதில் கொடுத்ததை கண்டு அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பங்குத்தந்தை, உற்சாகப்படுத்திய பெற்றோர்கள், மறையறிவை கற்றுக் கொடுத்த வேதியர் சாமுவேல், மிகுந்த ஆர்வம் காட்டிய மாணவச் செல்வங்களை பரிபாலகர் அவர்கள் உளம் நெகிழ்ந்து பாராட்டினார்கள். பிள்ளைகளை தொடர்ந்து உற்சாகப்படுத்த செபமாலை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்கள். இப்புனித நிகழ்வில் பரிபாலகர் செயலர் அருட்தந்தை சிகாமணி மற்றும் புனித பிரான்சிஸ் சலேசியார் பள்ளிகளின் முதல்வர் தந்தையர்கள் கலந்து கொண்டனர்.

வருகைத்தந்த அனைவருக்கும் இந்நாள் ஓர் மறக்க முடியாத மற்றும் இறை அனுபவம் பெறும் நாளாக இருந்தது.

அன்புடன்
அருட்பணி **இ. ஜோன் கிரகோரி**
பங்குத்தந்தை, வாணியம்பாடி

**Birthday**

| | | |
|---|---|---|
| 1 | Fr. A.Anthony | 02.12.1971 |
| 2 | Fr. S.Antony Buddhan | 05.12.1949 |
| 3 | Fr. C.Matthew | 05.12.1969 |
| 4 | Fr. A.Sagaya Josephson | 05.12.1979 |
| 5 | Fr. P.Chinnappan | 07.12.1977 |
| 6 | Fr. P.John Bosco | 08.12.1952 |
| 7 | Fr.Velanganni Vinothraj | 08.12.1974 |
| 8 | Fr. N. T.Irudayaraj | 09.12.1968 |
| 9 | Fr.A.C.Savarimuthu | 12.12.1947 |
| 10 | Fr. S.Jesu Jayabalan | 23.12.1975 |
| 11 | Fr. A.Kulandesu | 25.12.1958 |
| 12 | Fr. A.Charles Jesu Doss | 25.12.1974 |
| 13 | Fr. A.Alphonse Doss | 30.12.1948 |
| 14 | Fr. S.Lourduswamy | 30.12.1955 |

**Ordination**

| | | |
|---|---|---|
| 1 | Fr. K. S.Gnana Jyothi | 01-12-1982 |
| 2 | Fr.P.Arputha Rayan | 03-12-1976 |
| 3 | Fr. K. A.Rayappa | 09-12-1982 |
| 4 | Fr. L.Susainathan | 10-12-1983 |
| 5 | Fr. S.Lourduswamy | 11-12-1981 |
| 6 | Fr. G.Mathias | 16-12-1966 |
| 7 | Fr. A.Rayappan | 19-12-1992 |
| 8 | Fr. M. Packiasamy | 21-12-1970 |

**Calendar**

| | | |
|---|---|---|
| 3 | Fri | St. Frances Xavier, P Memorial |
| 5 | Sun | Second Sunday of Advent Sunday |
| 7 | Tue | Ambrose, B & D Memorial |
| 8 | Wed | Immaculate Conception SOLEMNITY |

| | | |
|---|---|---|
| 12 | Sun | Third Sunday of Advent |
| 13 | Mon | Lucy, V & M Memorial |
| 14 | Tue | John of the Cross, P & D Memorial |
| 19 | Sat | Fourth Sunday of Advent |
| 25 | Sat | Christmas SOLEMNITY |
| 26 | Sun | Holy Family Feast |
| 27 | Mon | John, Apostle and Evangelist Feast |
| 28 | Tue | Holy Innocents, Mm Feast |

**Necrology**

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. Stanislaus | 07.12.2021 |
| 2 | Rev. Fr. John Durai | 10.12.2009 |
| 3 | Most Rev. Eugene Mederlet SDB | 12.12.1934 |
| 4 | Rev. Fr. Capiagi SDB | 14.12.1985 |
| 5 | Rev. Fr. M. I. Jaikumar | 16.12.2006 |
| 6 | Most Rev. Antony Muthu | 19.12.1980 |
| 7 | Rev. Fr. Jaganathan Chinnappa SDB | 22.12.1994 |
| 8 | Rev. Fr. Alfred Schup SDB | 23.12.1987 |
| 9 | Rev. Fr. J. John Valarkott | 23.12.2016 |
| 10 | Rev. Fr. Gnanaprakasam | 26.12.1982 |
| 11 | Rev. Fr. Fidelis Cozzi SDB | 27.12.1963 |
| 12 | Rev. Fr. Dabove SDB | 31.12.1981 |

**Intention**

**Catechists**

Let us pray for the catechists, summoned to announce the Word of God: may they be its witnesses, with courage and creativity and in the power of the Holy Spirit.

**RIP**

1. In your charity kindly pray for the repose of the soul of M. Mary Metilda (36) beloved niece of Rev. Fr. S. Daniel, Parish Priest of St. Antony Shrine, Viruduvilanginan, passed away on 12.11.2021.

2. In your charity kindly pray for the repose of the soul of Rev. Sr. Regina Mary FSJ, beloved Cousin Sister of Rev. Fr. N. Arockia Doss, Parish Priest of St. John De Britto Church, Allikondapattu, passed away on 19.11.2021.

3. In your charity kindly pray for the repose of the soul of Mrs. Thangammal, beloved mother of Mr. Savarimuthu (Diocesan Administrator’s Driver, Bishop’s House, passed away on 26.11.2021.

4. In your charity kindly pray for the repose of the soul of Mr. Muthusamy, beloved father of Rev. Fr. M. Nicholas Parish Priest, St. Antony’s Church, Santhavasal, passed away on 05.12.2021